# இராமேஸ்வரம் நகர் மன்றகூட்டம்

## 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் தேதிகாலை 11 : 00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்றக் கூட்ட நடவடிக்கை

## முன்னிலை: அ. வீரமுத்துகுமார் B.Tech.,
## தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர், இராமேஸ்வரம் நகராட்சி

| பொருள் எண் | பொருள்விபரம் | தீர்மானவிபரம் |
|---|---|---|
| 1 | இராமேஸ்வரம் நகராட்சி பகுதிகளிலுள்ள அரசு பள்ளிகள் இரண்டு எண்ணம் அரசு பள்ளிகள் கழிப்பறைகள் மற்றும் பள்ளி வளாகத்தினை சுத்தம் செய்யும் பணிகளுக்கு 06 எண்ணம் துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்வதற்கு 29.11.2017 அன்று மின்னணு வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரப்படுவதில் கீழ்க்கண்ட வரப்பெற்ற இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளி கீழ்க்கண்டவாறு மன்றத்தில் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மானம் எண். 84 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 1 | Sun (Tamilnadu) Security Management Services Pvt Ltd<br>Madurai | ரூ.365/– |
| 2 | Sharp (Madurai) ) Security Management Services Pvt Ltd<br>Madurai. | ரூ.370/– |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலகக்குறிப்பு</u><br><br>வரப்பெற்ற இரண்டு எண்ணம் ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்தபட்ச விலைப்புள்ளி தொகை கேட்ட Sun (Tamilnadu) Security Management Services Pvt Ltd Madurai நிறுவனத்தின் விலைப்புள்ளி தொகையினை ஏற்கலாம். | |
| **2** | சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)—ல் பிரிவு 3,6 மற்றும் 25—களில் வழஙகப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு திடக்கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016—ஐ இயற்றியுள்ளது. இந்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு நகராட்சியும் தனது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் நகராட்சி கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், தரம்பிரித்தல், எடுத்துச் செல்லுதல், செயலாக்கம் மற்றும் இறுதியாக்கம் செய்தல் போன்ற பணிக்கான அடிப்படை கட்மைப்பு வசதிகளை ஏற்படுத்த பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016—ன் விதி 4—ல் குறிப்பிட்டுள்ளவாறு கழிவுகளை உருவாக்குபவர் அந்தந்த நகராட்சி நிர்வாகத்துடன் ஒருஙகிணைந்து கழிவுகளை கண்ட இடஙகளில் கொட்டாமல் தவிர்க்கவும், கழிவுகளை தரம் பிரித்து நகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள முறைப்படி அப்புறப்படுத்தவும் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.<br><br>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அத்தியாயம் பிரிவு 153,156,157,158,160 மற்றும் 161—ன் படி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவுகளை அகற்ற போதிய ஏற்பாடுகள் செய்யவும், திடக்கழிவு சேவையில் ஈடுபட்டு பொது சுகாதாரம் பேணி சுற்றுச்சூழலை பாதுகாக்கும் செலவினத்தை அதன் பொறுப்பாளர்களிடம் இருந்து பணம் வசூலித்து செயல்படுத்தவும் நச்சுத் தன்மை உடைய கழிவுகளையோ, அழுகிய கழிவுகளையோ, மலக்கழிவுகளையோ, மருத்துவக்கழிவுகளையோ மாற்றம் | **தீர்மானம் எண். 85 <u>அனுமதிக்கப்பட்டது.</u>** |

| | | |
|---|---|---|
| | செய்தல் சாலைகளில் போடுதல் மற்றும் வடிகால்வாய்களில் கொட்டுதல் ஆகியவை தடைசெய்யப்படுகிறது. மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை மற்றும் அபராதம் விதிக்க வழிவகை செய்யப்பட்டு உள்ளது.<br><br>மேற்காணும் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு, நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் சுத்தமாகவும், வடிகால்வாய் தஙகு தடையின்றி செயல்படவும், நிலத்தடி நீர் மற்றும் சுற்றுப்புற காற்றின் தரம் ஆகியவை மாசுபடுவதை தவிர்க்கவும், பொது சுகாதாரம் பாதுகாக்கவும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் கையாளுதல் விதிகள் 2016–ன் படி நகர் மன்ற ஆணையாளருக்கு திடக்கழிவு மேலாண்டை திட்ட செயல்பாட்டிற்கு தனிநபர் குடியிருப்புகள் மற்றும் வணிகர்களிடம் இருந்து திடக்கழிவு மேலாண்மை திட்டம் கையாளுதல் கட்டணம் வசூலிக்கவும் துணை விதிகளின் படி, நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் வழஙகப்படும்.<br><br>1. இராமேஸ்வரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்கள், சந்துகள், கடைவீதிகள், குடியிருப்புகள், தொகுப்பு வீடுகள், உணவகஙகள், அலுவலகஙகள், வணிகவளாகஙகள் இன்ன பிற இடஙகளில் வசிக்கும் மக்கள் திடக்கழிவுகளை தெருக்களிலோ, சாலை ஓரஙகளிலோ, சந்துகளிலோ, கழிவு நீர்க்கால்வாய்காளிலோ, பொது இடஙகளிலோ, மற்றும் நீர்நிலைகளிலோ போடக் கூடாது என்று தடைவிதிக்கப்படுகிறது.<br>2. மக்கள் வசிக்கும் மற்றும் கூடும் இடஙகளில் உருவாகும் குப்பைகளை மக்கும் தன்மை உள்ளவற்றினை தனியாகவும் மக்காத தன்மை உள்ளவற்றினை தனியாகவும் சேகரம் செய்யப்பட வேண்டும். மக்கும் தன்மையுள்ள குப்பைகளை பச்சை நிறக் கூடையிலும், மக்காத தன்மையுள்ள குப்பைகளை சிவப்பு நிறமுள்ள கூடையிலும், சேகரம் செய்யப்பட வேண்டும். இது வீடு அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். கூடைகள் சொந்த செலவில் வாஙகி உபயோகிக்க வேண்டும்.<br>3. இவ்வாறு தரம் பிரித்து சேகரம் செய்யப்பட்ட குப்பைகளை நகராட்சி வாகனம் ஒவ்வொரு வீட்டிற்கும் | |

குறிப்பிட்ட நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளும். தனித்தனியாக பிரிக்கப்பட்ட இந்த குப்பைகளை வாகனத்தின் பொறுப்பாளரிடம் நேரில் ஒப்படைத்து வீட்டின் அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். பிரிக்கப்படாத குப்பைகளை கண்டிப்பாக வாஙகப்படமாட்டாது.

4. அடுக்குமாடி குடியிருப்புகள், தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் இதர ஒன்றுக்கு மேற்பட்ட குடியிருப்புகள் உள்ள பகுதியில் உள்ள வீடுகளது அல்லது நிறுவனஙகளது உரிமையாளர் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் நகராட்சியின் வாகனம் வரும்போது அவை நிறுத்தப்பட்டிருக்கும் இடத்தில் நேரில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும். நகராட்சி பணியாளர்களால் மாடி ஏறி வந்து குப்பை பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.
5. மீன், கோழி, ஆடு போன்ற இறைச்சி கடை நடத்துபவர்கள் கழிவுகளை தெருக்களிலோ அல்லது திறந்த வெளியிடஙகளிலோ அல்லது கழிவு நீர்க் கால்வாய்களிலோ போடக்கூடாது. ஆவைகளை கசிவு ஏற்படாத வகையில் பொட்டலஙகளாக்கி நகராட்சியின் வாகனத்தில் ஒப்படைக்க வேண்டும். இதற்காக பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தக் கூடாது.
6. மருத்துவமனை கழிவுகள், நோய் கிருமி சோதனை செய்யும் கூடஙகள் மற்றும் கால்நடை மருந்து கழிவுகளை எக்காரணம் கொண்டும், குப்பைகளில் சேர்க்க கூடாது. இந்திய அரசின் 1999 ஆம் ஆண்டின் மருத்துவ கழிவு நீர் மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகளில் கூறியவாறு மருத்துவமனை மற்றும் சோதனைச் சாலை பொறுப்பில் உரியவாறு அகற்றி அழித்தல். மருத்துவனை கழிவுகளை நகராட்சி பகுதியில் கொட்டுதல், புதைத்தல் மற்றும் எரித்தல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றஙகளாகும்.
7. தோட்டக் கழிவுகள், பால்பண்ணை கழிவு ஆகியவற்றை உருவாக்குவோர் உரிமையாளர் அவற்றை

| | | |
|---|---|---|
| | தம் சொந்த பொறுப்பில் அப்புறப்படுத்த வேண்டும். நகராட்சி சாலை ஓரங்கள் மற்றும் பொது இடங்களில் கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.<br>8. கட்டட இடிபாடுகளை கட்டட உரிமையாளர் ஒப்பந்தக்காரர்கள் சாலைகளிலோ, தெருக்களிலோ, போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். ஆவைகளை சம்மந்தப்பட்டவர்கள் தங்களது சொந்த பொறுப்பில் அகற்றிக்கொள்ள வேண்டும் அல்லது உரிய நிர்வாகக் கட்டணம் செலுத்தினால் நகராட்சி தனது வாகனம் மூலம் அவைகளை அப்புறப்படுத்தும்.<br>9. நகராட்சி எல்லைக்குள் பிளாஸ்டிக், ரப்பர், டயர் உள்ளிட்ட திடக்கழிவுகள் எவற்றையும் எரிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.<br>10. திருமண மண்டபங்கள், கோயில், சர்ச், மசூதிகள், சத்திரம் ஆகியவற்றில் நடைபெறும் திருமணம் மற்றும் இதர விசேஷங்களின் போது உருவாகும் கழிவுகளை தெருக்களிலோ, சாலைகளிலோ, கழிவு நீர் வாய்கால்களிலோ அல்லது வேறு எந்த பகுதிகளிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். இவற்றை தமது வாகனம் மூலம் நகராட்சி உரக்கிடங்கில் ஒப்படைக்க வேண்டும். இதற்காக நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக கட்டணம் செலுத்தினால் நகராட்சி வாகனமே அவற்றை பெற்றும் செல்லும்.<br>11. உணவு விடுதிகள், தேநீர் விடுதிகள், தள்ளுவண்டியிலுள்ள உணவுப் பொருள் விற்பனை நிலையங்கள், இரவு நேரக் கடைகள், காய்கறி மொத்த வியாபார நிலையம், மார்க்கெட் ஆகியவற்றில் உருவாகும் குப்பைகளை தெருக்களிலோ, சாலைகளிலோ அல்லது நகராட்சியின் எந்த ஒரு பகுதியிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். உரிய நிர்வாகக் கட்டணம் செலுத்தினால் நகராட்சி வாகனமே இவற்றினை பெற்றுக்கொள்ளும்.<br>12. அச்சகஙகள், தொழிற்சாலைகள், ரசாயன மருந்து கையாளும் தொழிற்சாலை மற்றும் இதில் | |

குறிப்பிடாத அனைத்து வணிக மற்றும் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் குப்பை கழிவுகளை நகராட்சி எல்லைக்குள் கொட்டக்கூடாது.

13. தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுகளை நகராட்சி பகுதியில் விடக்கூடாது. கழிவுகளை அப்புறப்படுத்த மாசுக்கட்டுப்பாடு வாரியம் வகுத்துள்ள விதிமுறைகளின்படி அப்புறப்படுத்த வேண்டும்.
14. பாதசாரிகள் மற்றும் சாலை ஓரஙகளிலும் இதர இடஙகளிலும் குடியிருப்போர் நகராட்சி சாலை ஓரஙகளில் மலம் மற்றும் சிறுநீர் கழித்தல் கூடாது.
15. செப்டிக்டேஙக் கழிவுகளை, கழிவு நீர் வாய்க்கால்களிலோ, அல்லது தெருக்களிலோ கொட்டக் கூடாது. அவ்வாறு கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.
16. நகராட்சியின் வாகனம் மூலம் குப்பை கழிவுகளை நீக்கம் செய்வதற்கான நிர்வாக கட்டணஙகள் பின்வருமாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

**அட்டவணை – I**

| வ. எண் | பொருள் | | காலம் | கட்டணம் ரூபாய் |
|---|---|---|---|---|
| | **குடியிருப்பு** | | | |
| 1 | தனிநபர்குடியிருப்பு<br>(சொத்துவரி அரையாண்டுக்கு ரூ.500க்குள்) | | மாதம் ஒன்றுக்கு | 10.00 |
| 2 | தனிநபர்குடியிருப்பு<br>(சொத்துவரி அரையாண்டுக்கு ரூ.501–1000க்குள்) | | மாதம் ஒன்றுக்கு | 20.00 |
| 3 | தனிநபர்குடியிருப்பு<br>(சொத்துவரி அரையாண்டுக்கு ரூ.1001–2000க்குள்) | | மாதம் ஒன்றுக்கு | 30.00 |
| 4 | தனிநபர்குடியிருப்பு<br>(சொத்துவரி அரையாண்டுக்கு ரூ.2001–க்கு மேல்) | | மாதம் ஒன்றுக்கு | 50.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | **நிறுவனம்** | | | |
| 1 | தனியார் பள்ளி / கல்லூரி விடுதி/தனியார் அலுவலக வளாகம். | | மாதம் ஒன்றுக்கு | 300.00 |
| 2 | மருத்துவமனை (படுக்கையுடன்) | | மாதம் ஒன்றுக்கு | 500.00 |
| 3 | கிளினிக் | | மாதம் ஒன்றுக்கு | 300.00 |
| **3.** | **வணிகம்** | | | |
| 1 | டீ ஸ்டால்/சிற்றுண்டி | | மாதம் ஒன்றுக்கு | 50.00 |
| 2 | நடமாடும் உணவகம் | | மாதம் ஒன்றுக்கு | 10.00 |
| 3 | உணவகம் சிறியது | | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| 4 | உணவகம் பெரியது | | மாதம் ஒன்றுக்கு | 1000.00 |
| 5 | வணிகவளாகம் | | நாள் ஒன்றுக்கு | 50.00 |
| 6 | திருமணமண்டபம் சிறியது | | நிகழ்வு ஒன்றுக்கு | 500.00 |
| 7 | திருமணமண்டபம் பெரியது | | நிகழ்வு ஒன்றுக்கு | 1000.00 |
| 8 | சிறிய மீன்/மட்டன் ஸ்டால்/சிக்கன் ஸ்டால் | | மாதம் ஒன்றுக்கு | 300.00 |
| 9 | பலசரக்கு கடை மற்றும் இதர பல்பொருள் அங்காடி | | மாதம் ஒன்றுக்கு | 500.00 |
| 10 | சினிமா தியேட்டர் மற்றும் பொழுதுபோக்கு மையம் | | மாதம் ஒன்றுக்கு | 500.00 |
| 11 | காய்கறிகள் வியாபாரம் | | நாள் ஒன்றுக்கு | 10.00 |
| 12 | டெக்ஸ்டைல்ஸ் நிறுவனக் கழிவுகள் | | லாரி லோடு ஒன்றுக்கு | 1500.00 |
| 13 | தோல் நிறுவனக் கழிவுகள் | | லாரி லோடு ஒன்றுக்கு | 1500.00 |
| 14 | அனைத்து சிறு தொழில் கழிவுகள் | | லாரி லோடு ஒன்றுக்கு | 1000.00 |
| 15 | இருசக்கர வாகனங்கள் | | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| 16 | நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் ஒர்க் ஷாப் | | மாதம் ஒன்றுக்கு | 200.00 |
| 17 | ஓடுகள் பளிங்கு கற்கள் போன்றவை விற்பனை | | மாதம் ஒன்றுக்கு | 500.00 |
| 18 | மரச்சாமான்கள் மற்றும் டிம்பர்ஸ் | | மாதம் ஒன்றுக்கு | 500.00 |
| 19 | பழைய சாமான்கள் சேகரித்தல் | | மாதம் ஒன்றுக்கு | 200.00 |
| 20 | அச்சகங்கள் மற்றும் காகிதப் பொருட்கள் விற்பனை | | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| 21 | தகரம் மற்றும் பெயிண்ட் விற்பனை | | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| 22 | பழக்கடை மற்றும் பூக்கடை | | மாதம் ஒன்றுக்கு | 10.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 23 | மதுபானக்கடை | | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| 24 | மீன் சேகரித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய மற்ற தொழில்கள் | | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| 25 | காய்ந்த விளக்குமாறு, வைக்கோல் புல் விற்பனைக்கு அதனுடன் தொடர்புடைய மற்ற தொழில்கள் | | மாதம் ஒன்றுக்கு | 50.00 |
| 26 | சஙகு, பாசிகள் மற்றும் கடல் பொருட்கள் | | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| | **மற்றவை** | | | |
| அ. | மரக்கழிவுகள் | | லாரி லோடு ஒன்றுக்கு | 500.00 |
| ஆ. | தோட்டக்கழிவுகள் | | லாரி லோடு ஒன்றுக்கு | 500.00 |
| இ. | கட்டக்கழிவுகள் | | லாரி லோடு ஒன்றுக்கு | 750.00 |

17. மேற்காணும் துணை விதிகளை மீறுபவர்கள் மீது தமிழ்நாடு 1920 நகராட்சிகள் சட்டம் பிரிவுகளின் கீழ் சட்டப்படியான நடவடிக்கை தொடரப்படும். மேலும் 1999 ஆம் ஆண்டு மத்திய அரசின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் பிரிவு 15–ன் படி, இராமேஸ்வரம் நகராட்சியின் சுற்றுச் சூழலுக்கு எதிராக செயல்பட்டதாக கருதி உரிய நடவடிக்கை தொடரப்படும்.
18. துணை விதிகளில் குறிப்பிட்டுள்ள, செய்யக்கூடாத செயலை செய்யும் நபருக்கு தண்டனையாக அட்டவணை 4–ல் கண்டவாறு அபராதம் வசூலிக்கப்படும்.
19. தொடர் குற்றஙகளுக்கு தினசரி ரூ.100– வீதம் அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.
20. மேலும் விதிகளில் கூறப்பட்டுள்ள, நிர்வாக கட்டணஙகளை விதித்தல், வசூல் செய்தல், அபராதக் கட்டணஙகளை வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை ஆகியவற்றிற்கு, நகராட்சியின் ஆணையாளருக்கு நகராட்சி மன்றத்தினரால் அதிகாரம் வழஙகப்பட்டுள்ளது.

## அட்டவணை –II

மக்கும் கழிவுகள் மற்றும் மறுசுழற்றி கழிவுகள் விளக்கப்பட்டியல்

| உயிரி மக்கும் கழிவு | மறுசுழற்சி செய்யத்தக்க கழிவு |
|---|---|
| மக்கும் கழிவு என்பதன் பொருள் பொதுவாக நகராட்சி குப்பையில் காணப்படும் கழிவாகும். | மறுசுழற்சி செய்யத்தக்க கழிவு என்பது பொதுவாக நகராட்சி குப்பையில் |

| | |
|---|---|
| இதை ஈரக்கழிவு எனவும் அழைக்கப்படுகிறது. மக்கும் கழிவு முழுமையாக தாவரம் அல்லது விலஙகு மூலஙகளிலிருந்து உருவாகும் ஒருவகை கழிவாகும். | காணப்படுவதாகும். இது உலர் கழிவு எனவும் அழைக்கப்படுகிறது. இதை ஒரு செயல் முறையில் புதிய பொருட்கள் உருவாக்குவதற்கு வேண்டிய மூலப் பொருட்களாக மாற்ற முடியும். புதிய அப்பொருட்கள் அசல் பொருட்கள் போல இருக்கலாம். அவ்வாறு இல்லாமலும் இருக்கலாம். |
| • இலைகள், முட்டை ஓடுகள், பழம், காய்கறித் தோல்கள் மற்றும் பயன்படாதென விடுபவை உள்ளிட்ட சமையலைக் கழிவுகள்<br>• இறைச்சி மற்றும் எலும்புகள்<br>• மலர்கள் உட்பட தோட்டக்குப்பை மற்றும் இலைக்குப்பை<br>• விலஙகு குப்பை<br>• பழுதடைந்த காகிதம்<br>• தேஙகாய் ஓடு<br>• சாம்பல் | • செய்திதாள்கள்<br>• தாள், புத்தகம் மற்றும் இதழ்கள்<br>• கண்ணாடி<br>• உலோகப்பொருட்கள், கம்பி<br>• நெகிழி (Plastic) கந்தல் துணி<br>• தோல்<br>• ரெக்சின் (Rexine)<br>• தொய்வை (Rubber)<br>• மரம்/அறைகலன்<br>• மூட்டை கட்டல் |

**அட்டவணை –III**

வீட்டு அபாயகரமான கழிவு பட்டியல்

- ஏரோசல் டப்பா (Aerosol cans) மின்வெட்டொளி விளக்கின் மின்கலப்பெட்டியும் பட்டம் செல்லும்.
- நிறம் நீக்கி மற்றும் வீட்டு சமையலறையும், வடிகாலையும் தூய்மை செய்யும் பொருட்கள் இவற்றின் கொள்கலன்கள்.
- சீருந்து மின்கலப்பெட்டிகள், எண்ணெய் வடிகட்டிகள் மற்றும் சீருந்து பராமரிப்பு பொருட்கள் மற்றும்

நுகர் பொருட்கள், வேதிய பொருட்கள் மற்றும் கரைப்பான்கள் இவற்றின் கொள்கலன்கள்.

- ஒப்பனை பொருட்கள் இராசாயன அடிப்படையிலான பூச்சிக்கொல்லிகள் மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- ஒளி விளக்குகள், குழாய் விளக்குகள் மற்றும் அடர்த்தியான ஒளிர் விளக்குகளை (CFL) வேண்டாமென்று விலக்கிய மருந்துகள் மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- வண்ணப்பூச்சு, எண்ணெய்கள், உயவுப்பொருட்கள் (Lubricants) வஜ்ரபசைகள் (Glues) நீர்மமாக்கிகள் (Thinners) மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக் கொல்லிகள் அவற்றின் வெற்று கொள்கலன்கள்.
- புகைப்பட ஆடியோ/ வீடியோ நாடாக்கள் (Tapers) மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- இராசாயனப் பொருட்கள் மெத்து (Styrofoam) மற்றும் அறைகலன்களை சிப்பம் கட்டும் மென்மையான மெத்துகள்
- மூட்டை கட்டும் கருவிகள், வெப்பமானிகள் மற்றும் பாதரசம் கொண்ட பொருட்கள்.
- தனியாள் கணினிகள், தொலைபேசிகள் , எம்பி3 இயக்கிகள், ஆடியோ சாதனஙகள், தொலைக்காட்சி பெட்டிகள், கணிப்புப்பொறி, ஜி.பி.எஸ் (GPS) தானியஙகி மின்னணு, டிஜிட்டல் படி பெட்டிகள், தானாக ஒளியை இயக்கும் கருவிகள் மற்றும் டிவிடி (DVD) கள், வி.சி.ஆர் (VCR) கள் அல்லது கேம்கோடா போன்ற வீடியோ ஊடகத்தைப் பயன்படுத்தி ஒளி இயக்கும் கருவிகள் மற்றும் பதிப்பான்கள் முதலிய மின்கழிவுகள்.

**அட்டவணை –IV**

அபராதப்பட்டியல்

| வ.எண் | துணை விதிகள் விளக்கம் | சட்டத்தை மீறினால் செலுத்த வேண்டிய தண்டத் தொகை ரூ |
|---|---|---|
| 1. | பொது இடத்தில், தனியார் சொத்தில் வண்டியிலிருந்து குப்பைகளை எறிதல், கடைகளிலிருந்து/வணிக நிறுவனஙகளிலிருந்து குப்பைகளை எறிதல் | 100 |
| 2. | திடக்கழிவுகளை உரிய முறைப்படி பிரித்து வழஙகாமை | |

| | | | |
|---|---|---|---|
| | | அ) குடியிருப்புகள் | 100 |
| | | ஆ) அடுக்குமாடி குடியிருப்புகள்/காலனிகள் | 500 |
| | | இ) அதிக கழிவுகளை உருவாக்குபவர்கள் (Bulk Generators) | 1000 |
| | 3. | கட்டுமான கழிவுகள் மற்றும் கட்டிட இடிபாடுகளை உரிய முறைப்படி பிரித்து வழஙகாமை | 5000 |
| | 4. | தோட்டக்கழிவை, மரக்கழிவை குறிப்பிட்ட வகையில் இல்லாமல் ஒப்படைத்தல் | 500 |
| | 5. | சமூக குப்பை ஒருஙகு சேர்த்தல் தொட்டிக்கு வெளியே அல்லது ஒதுக்கப்படாத பகுதியில் குப்பை கொட்டுதல் | 1000 |
| | 6. | கழிவுகளை எரித்தல் | |
| | | அ) தனியார் தன் வளாகத்திற்குள் | 200 |
| | | ஆ) தனியார் பொது இடத்தில் | 500 |
| | | இ) நிறுவனஙகள், வணிக நிறுவனம் | 1000 |
| | 7. | மீன், வளர்ப்பு பறவை, இறைச்சி ஆகியவற்றின் கழிவை (வீட்டில் உருவானது அல்லாதது) குறிப்பிட்ட வகையில் பிரித்து ஒருஙகு சேர்த்தல் செய்யாமல் ஒப்படைத்தல் | 500 |
| | 8. | கொள்கலம்/ குப்பைக்கூடை இல்லாத விற்பனையாளருக்கு / கூவி விற்பவருக்கு | 100 |
| | 9. | குறிப்பிட்ட வகையில் கழிவை பிரிக்காமல் ஒப்படைக்கும் விற்பனையாளருக்கு / கூவி விற்பவருக்கு | 500 |
| | 10. | பொதுக்கூட்டம்/ நிகழ்ச்சிக்கு பின் தூய்மை வைப்புத்தொகை 24 மணி நேரத்திற்குள் பறிமுதல் ஆவதுடன் அபராதம் தூய்மைப்படுத்தாமல் இருப்பதற்கு | 1000 |
| | 11. | கழிவுகளை கொட்டுதல்<br>கழிவுநீர் ஊர்தி மூலம் எடுக்கப்படும் கழிவுகளை சுகாதார முறைப்படி அப்புறப்படுத்தாமல் கண்ட இடஙகளில் கொட்டி பொது சுகாதாரத்திற்கும் பொதுமக்களுக்கும் பஙகம் விளைவித்தல். | 5000 |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

<table>
<tr><td></td><td>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>3</td><td>இராமேஸ்வரம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18, இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் மருத்துவர் எம். மணிகண்டன் அவர்கள் பரிந்துரை செய்த பணிக்கு மாவட்ட கட்சித்தலைவர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முதலிய அவர்களின் செயல் ஆணை ந.க.எண் ஆர்4/5100/2017 நாள் 10.10.2017–ன் படி இராமேஸ்வரம் நகராட்சி ஓலைக்குடா பகுதியில் R.O Syntax மூலம் குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு நிர்வாக அனுமதி வழுங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி திட்டப்பணியின் அவசியத்தைக் காண 09.11.2017 அன்று முதல் தொகை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.
<table>
<tr><td>1.</td><td>திரு. S.M.S இண்டஸ்டிரீஸ்<br>No.34, மாரியம்மன் கோவில் தெரு,<br>இராமநாதபுரம்.</td><td>மதிப்பீட்னை விட 0.06% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு. கார்த்திக் இண்டஸ்டிரீஸ்<br>சூடி.1 மாரியம்மன் கோவில் தெரு,<br>இராமநாதபுரம்.</td><td>மதிப்பீட்னை விட 0.34% அதிகம்</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்னைக் காட்டிலும் 0.06% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள இண்டஸ்டிரீஸ் இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.<br><br><u>அலுவலகக்குறிப்பு:</u><br><br>• அனுமதிக்கலாம்.<br>• மேற்படி திட்டப்பணிகள் அவசியத்தைக் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதாகவும் அங்கீகரிக்கலாம்.</td><td>தீர்மானம் எண். 86<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 4 | இராமேஸ்வரம் நகராட்சி தொடர்பான இராமேஸ்வரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்குகளுக்கு வழக்கு கட்டணம் ரூ.19400/– வழக்கறிஞர் திரு.S.ஹரிஹரன் வழக்கறிஞருக்கு வழங்க ஆணையரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 87 அனுமதிக்கப்பட்டது** |
| 5 | இராமேஸ்வரம் நகராட்சியில் நடைபெற்றுவரும் திட்டப்பணிகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளை நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு கீழ்காணும் நாளிதழ் நிறுவனங்களுக்கு கட்டணத்தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>வ.எண் / நாளிதழ் பெயர் / தொகை<br>1 / தினபூமி / 10500<br>2 / எக்ஸ்பிரஸ் பப்ளிகேசன்ஸ் / 25200<br>3 / தினசங்கு / 9800<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 88 அனுமதிக்கப்பட்டது** |
| 6 | இராமேஸ்வரம் நகராட்சியில் உள்ள ஜென் செட் இயந்திரம் பழுதானதை சரிசெய்யும் பணிக்கு M/s Edward Electrical நிறுவனத்திற்கு ரூ.24300/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 89 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| **7** | இராமேஸ்வரம் நகராட்சி அலுவலகத்திற்கு தேவையான கணினி , பிரிண்டர் மற்றும் ஸ்கேனர் ஆகியவைகளை D&GST விலையில் வாங்கியதற்கு M/s Kishore Enterprises நிறுவனத்திற்கு ரூ.108594/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 90 அனுமதிக்கப்பட்டது** |
| **8** | இராமேஸ்வரம் நகராட்சி அலுவலகத்திற்கு CCTV கேமரா பொருத்திய வகையில் M/s Cute Computers நிறுவனத்திற்கு ரூ.34500/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 91 அனுமதிக்கப்பட்டது** |
| **9** | இராமேஸ்வரம் நகராட்சிபகுதியில் மேதகு ஜனாதிபதி அவர்கள் 27–12–2017 அன்று வருகையினை முன்னிட்டு அவர் தங்கும் அரசினர் விருந்தினர் மாளிகை எதிர்புறம் உள்ள பூங்காவில் கிரில்கள் அமைப்பது, ஓலைக்குடா சாலையில்உள்ள சேதமடைந்த சுற்றுலா தகவல் பலகைகளை சீர் செய்திடவும், தெருவிளக்கு பல்புகள் வாங்கவும் மற்றும் நீதிமன்ற வளாகம் அருகில் வாகனங்களை தடுக்கும் பொருட்டு இரும்பு கம்பிகள் மற்றும் தடுப்புகள் அமைக்கும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1,60000க்கு மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி நகராட்சி பிரிவு சட்டம்15ம் படி மேற்கொள்ளும் பொருட்டு 13–12–2017 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும்படி | **தீர்மானம் எண். 92 அனுமதிக்கப்பட்டது** |

விலைப்புள்ளிகள் வரப்பெற்றது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் | தொகை |
|---|---|---|
| 1 | M/S கிருஷ்ணா லேத் &வெல்டிங ஒர்க்ஸ்,<br>துறைமுக வீதி, இராமேஸ்வரம். | 159962 |
| 2 | M/S SJ லேத் &வெல்டிங் ஒர்க்ஸ்,<br>துறைமுக வீதி, இராமேஸ்வரம். | 163216 |
| 3 | M/S இராமநாதசுவாமி லேத் &வெல்டிங் ஒர்க்ஸ்,<br>துறைமுக வீதி, இராமேஸ்வரம். | 162732 |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

- வரப்பெற்ற 3 விலைப்புகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/S கிருஷ்ணா லேத் &வெல்டிங் ஒர்க்ஸ், ஏற்கலாம்

**ஆணையாளர்/தனி அலுவலர்,**
இராமேஸ்வரம் நகராட்சி.